**STC.No.151/2023          Date: 12.05.2026**

ம.சா.2 ராமநாதன் த.பெ.சுப்பையா

எதிரி ஆஜர்.
(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**குறுக்கு விசாரணை:**

எதிரியின் நிரந்தர முகவரியோ எதிரியின் குடும்பத்தாரை பற்றியோ நேரடியாக தெரியுமா என்றால் முகவரியை பற்றி தெரியாது, எதிரியின் மனைவியை தெரியும் நானும் எதிரியும் ஒரே அரசு போக்குவரத்து கழகத்தில் ஒரே டிப்போவில் வேலை பார்த்து வருகிறோம். எதிரி எந்த வருடத்தில் வேலைக்கு சேர்ந்தார் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு 2023 ல் என்ன சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் புகார்தாரரிடம் எந்த தேதியில் ரூ.7,00,000/- கடன் வாங்கினேன் என்றால், 2023 ம் வருடம் ஜனவரி மாதம் தேதி ஞாபகமில்லை. புகார்தாரர் வங்கிக் கணக்கில் எந்த தேதியில் மேற்படி ரூ.7,00,000/-த்தை செலுத்தினேன் என்றால் வங்கிக் கணக்கில் ரூ.5,00,000/-ம் கையில் ரூ.2,00,000/-ம் கொடுத்தேன், தேதி தெரியாது. ரூ.2,00,000/-ம் பணமாக புகார்தாரரிடம் கொடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் எதிரி எந்த மாதம் தேதியில் புகார்தாரரிடம் கடன் வாங்கிக் கொடுக்க சொல்லி கேட்டார் என்றால் 2023 ம் வருடம் ஜனவரி மாதம். எதிரியை புகார்தாரர் வீட்டிற்கு எந்த மாதம் எந்த தேதியில் பணம் வாங்கிக் கொடுப்பதற்காக அழைத்துச்சென்றேன் என்றால் 10.02.2023 ம் தேதி அழைத்துச் சென்றேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் மேற்படி 10 ம் தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 10.02.2023 ம்

தேதி புகார்தாரர் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை 10 மணியளவில் சென்றோம். யார் யார் சென்றோம் என்றால் நான் எதிரி மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர்கள் சென்றோம். 10.02.2023 ம் தேதி என்ன என்ன ஆவணங்கள் எதிரி புகார்தாரரிடம் கொடுத்தார் என்றால் SBI வங்கி காசோலை ஒன்றை ஒரு மாதத்திற்குள் பணத்தை திரும்ப கொடுத்துவிடுவதாக கொடுத்தார். வேறு எந்த ஆவணங்களும் கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரி கொடுத்த காசோலையின் எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி காசோலையை எதிரி நிரப்பி கொண்டு வந்தார். காசோலையில் எதிரி கையெழுத்து செய்யும்போது நான் பார்த்தேன். எதிரி தமிழில் கையெழுத்து போட்டாரா ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டாரா என்று தெரியாது. ம.சா.ஆ.1 காசோலையில் விபரங்கள் எழுதப்பட்டுள்ள மையும் கையெழுத்து போடப்பட்டுள்ள மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் தெரியாது. எதிரி புகார்தாரரிடம் பணத்தை பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே அவருடைய வங்கிக் காசோலையையும் சம்பள கணக்கு பட்டியலையும் புகார்தாரரிடம் கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டிருந்தால் அது சரியா தவறா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, பணம் வாங்கிய அன்றுதான் காசோலை கொடுத்தார். புகார்தாரரிடம் நான் திரும்ப கொடுத்த ரூ.7,00,000/-த்தை புகார்தாரர் எதிரிக்கு கொடுத்தார். ரூ.7,00,000/-த்தை புகார்தாரர் எதிரிக்கு எத்தனை கட்டுகளாக கொடுத்தார் என்றால் ரூ.500/- நோட்டு கட்டுகளாக கொடுத்தார், எத்தனை கட்டுகள் என்று தெரியாது ரூ.7,00,000/-த்தை. பணத்தை புகார்தாரர் எதிரியின் கையில் கொடுத்தார். புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது எதிரியின் மனைவியும் புகார்தாரர் மனைவியும் இருந்தார்கள். புகார்தாரரின் மனைவிக்கு நடந்த விபரங்கள்

தெரியுமா என்றால் தெரியும். எதிரி எதற்காக அந்த பணத்தை வாங்கினார் என்றால் வீடு கட்டுவதற்காக வாங்கினார். எதிரிக்கு புகார்தாரர் பணம் கொடுத்தது எதிரி காசோலை கொடுத்தது போன்ற நிகழ்வுகள் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 30 நிமிடங்கள் நடந்தது. எதிரி புகார்தாரரிடம் பணம் பெறும்போது வீட்டு பத்திரம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரி புகார்தாரிடம் கொடுத்த வங்கி காசோலையை புகார்தாரர் எந்த தேதியில் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரியிடம் எந்த தேதி மாதத்தில் ஏன் புகார்தாரருக்கு பணம் கொடுக்கவில்லை என்று கேட்டேன் என்றால் 12.03.2023 ல் கேட்டேன். அதற்கு எதிரி லோன் போட்டிருப்பதாகவும் அது இன்னும் வரவில்லை வந்த உடன் தருகிறேன் என்று சொன்னார். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றும்போது எனக்கும் எதிரிக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றும் பேசிக்கொள்ள மாட்டோம் என்று சொன்னால் சரியல்ல, தற்போது பணத்தை திரும்ப கேட்ட பிறகுதான் என்னுடன் பேசுவதில்லை. நான் யூனியன் லீடராக இருந்தேன். நான் சொல்லும்படிதான் எல்லோரும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் சரிதான், அதனால் நான் எதிரியை அடிக்கடி மிரட்டியதாக எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் இல்லை. அரசு போக்குவரத்து கழகத்தில் ஒய்வறை உள்ளது என்றால் சரிதான். 2023 ஜனவரி மாதத்தில் எதிரியின் காசேலையை எதிரிக்கு தெரியாமல் அவரை பழிவாங்கும் நோக்கில் எதிரி நான் சொல்வதை கேட்கவில்லை என்பதால் எதிரியின் காசோலையை எடுத்து வந்து புகார்தாரரிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வங்கி காசோலையில் உள்ள

கையெழுத்து எதிரியுடையது இல்லை என்றும் அதில் உள்ள வாசகங்களும் எதிரியால் எழுதப்படவில்லை என்றும் எதிரியை போல் கையெழுத்து செய்து இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் நிறைய வங்கி காசோலை வழக்குகளில் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 15.04.2023 ம் தேதி என் மீதும் புகார்தாரர் மீதும் எதிரியின் வங்கிக் காசோலை எடுத்து தவறுதலாக தாக்கல் செய்துள்ளதாக தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மைக்கு புறம்பான பொய்யானவை என்றால் சரியல்ல. எதிரி எந்த காலத்திலும் புகார்தாரரிடம் ரூ.7,00,000/-த்தை என் முன்னிலையில் வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக எந்த வங்கி காசேலையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியை பழிவாங்கும் நோக்கில் போடப்பட்டுள்ள பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.